# ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை 2019-2020 ஆம் நிதி ஆண்டு ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு சட்டம் 2017-ல் ஆணையிடப்பட்டவாறு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.22280 / 2017 / எக்ஸ்-1 நாள் 30.8.2017-இன்படி ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளை பத்திரமானது 22.9.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் 150/2017, நாள் 25.9.2017-இன்படி ஈரோடு மாவட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர்,<br>ஈரோடு | 1. | மாவட்ட ஆட்சியர்,<br>ஈரோடு |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>ஈரோடு | 2. | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>ஈரோடு |
| 3. | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>ஈரோடு | 3. | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>ஈரோடு |
| 4. (அ) | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>ஈரோடு | 4. | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>ஈரோடு |
| (ஆ) | துணை இயக்குநர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>ஈரோடு | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,<br>ஊராட்சிகள் வளர்ச்சி,(PAPD)<br>ஈரோடு |
| (இ) | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>ஈரோடு | 6. | உதவி இயக்குநர்,<br>ஊரகவளர்ச்சித் துறை,<br>ஈரோடு |
| (ஈ). | மாவட்டக் கருவூல அலுவலர்,<br>ஈரோடு. | 7. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,<br>ஈரோடு |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>ஈரோடு | 8. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்,<br>ஈரோடு / பெருந்துறை. |
| (ஊ) | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),<br>ஈரோடு | 9. | மாவட்ட வன அலுவலர்,<br>ஈரோடு. |
| (எ). | தலைவர்,<br>ஈரோடை, ஈரோடு | 10. | முதன்மைப் பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை (WRO)<br>ஈரோடு |
| (ஏ) | எஸ்.கே. யோகநாதன்,<br>த/பெ. கிருஷ்ணசாமி,<br>செலம்ப கவுண்டன் வலசு,<br>பெத்தாம்பாளையம்,<br>பெருந்துறை | 11. | உதவி இயக்குநர்,<br>நிலஅளவைப் பதிவேடுகள் துறை,<br>ஈரோடு |
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர்,<br>ஈரோடு. |
| | | 13. | மாவட்ட சமூகநல அலுவலர்,<br>ஈரோடு. |
| | | 14. | துணை இயக்குநர், (Health)<br>சுகாதாரப் பணிகள்,<br>ஈரோடு |
| | | 15. | ஒளிரும் ஈரோடு அமைப்பு,<br>ஈரோடு. |
| | | 16. | நிர்வாக பொறியாளர்,<br>(கிராமப்புற வளர்ச்சி),<br>ஈரோடு. |

2) ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக பாரத மாநில வங்கி கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண் 37239746192) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்டகனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளைக்கான நிரந்தர கணக்கு எண் பெறப்பட்டுள்ளது (PAN No. AABTE0874H)

4) ஈரோடு மாவட்டத்தில் பெருங்கனிம குவாரிகள் ஏதும் இல்லை. 88 சிறுகனிம உரிமங்களில் 39 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு முன்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகயையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள 49 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு பின்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

5) ஈரோடு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2020 வரை வங்கி கணக்கில் ரூ.1,86,93,539.50/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி ஆறு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து ஐநூற்று முப்பத்தி ஒன்பது ரூபாய் ஐம்பது பைசா மட்டும்) இருப்பில் உள்ளது.

6) 2018-19 ஆம் நிதியாண்டில் ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக ரூ.49,99,500/- மதிப்பிலான 14 திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் ரூ. 18,73,500/- மதிப்பிலான 7 திட்டங்கள் முடிக்கப்பட்டுவிட்டது. ரூ. 31,26,000/- மதிப்பிலான 7 திட்டங்கள் இன்னும் முடிக்கப்படாமல் செயல்பாட்டில் உள்ளன.

7) 2019-2020 ஆம் நிதியாண்டில் ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக ரூ. 49,20,000/- மதிப்பிலான கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - பாண்டியம்பாளையம் | ரூ. 485000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், பெருந்துறை |
| 2. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - சிங்காநல்லூர் | ரூ. 485000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், பெருந்துறை |
| 3. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - சின்னவீரசங்கிலி | ரூ. 485000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், பெருந்துறை |
| 4. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - கோட்டுப்புள்ளாம் பாளையம் | ரூ. 495000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், கோபிசெட்டிபாளையம் |
| 5. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - அயலூர் | ரூ. 495000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், கோபிசெட்டிபாளையம் |
| 6. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - கலிங்கியம் | ரூ. 990000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், கோபிசெட்டிபாளையம் |
| 7. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - அஞ்சானூர் | ரூ. 495000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், நம்பியூர் |
| 8. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - ஒழலக்கோயில் | ரூ. 495000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், நம்பியூர் |
| 9. | கட்டுமானப் பணி | உயர் கோபுர சூரிய விளக்கு கட்டுமானம் - ஒழலக்கோயில் | ரூ. 495000/- | வட்டார வளர்ச்சி அலுவலர், நம்பியூர் |
| | | மொத்தம் | ரூ. 4920000/- | |

8) 2019-2020 ஆம் நிதியாண்டில் ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட பிற செலவினங்களுக்காக ரூ. 14,87,323/- செலவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | செலவின விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | ஜீன் 2019 மாதம் முதல் மார்ச 2020 மாதம் வரை சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலக செலவினங்களுக்காக 1% தொகை வழங்கப்பட்டது. | 58,295/- |
| 2. | 2017-18, 2018-19 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வழங்கியமைக்காக பட்டய கணக்காயருக்கு வழங்கப்பட்டது | 45,000/- |

| | | |
|---|---|---|
| 3. | Apple I Pad, Elcot நிறுவனம் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டது | 84,028/- |
| 4. | சேலம் மண்டல இணை இயக்குநர் அலுவலகம் கட்டுமானம் பணிக்காக ஈரோடு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநருக்கு வழங்கப்பட்டது. | 13,00,000/- |
| | மொத்தம் | 14,87,323/- |

9) ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளையின் 2019-20 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்குள் மத்திய அரசால் ஏற்பளிக்கப்பட்ட பட்டய கணக்காளர் தி/ள். வெங்கடசுப்பிரமணியன் & ஸ்ரீ துர்க்கா, ஆடிட்டர், சேலம் மூலம் தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

இவ்ஆண்டறிக்கை ஈரோடு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு முன்பாக 20.11.2020 அன்று தாக்கல் செய்யப்பட்டு முழுமனதாக ஒப்புதல் பெறப்பட்டது.

(ஒப்பம்) 20/11/20

தலைவர்,
ஈரோடு மாவட்ட கனிம அறக்கட்டளை /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
ஈரோடு.

20/11/20
20/11/20
20/11/20